# வடு

## சாதிய 'வடு' அகற்றிடத் துணிந்த நெடும் பயணம் இது.

இதழ்-17 டிசம்பர்-2011

பொன்னி ஆச்சி

பக்-10



பக்-8,9



அண்மைக்காலமாக தமிழ் சினிமா பார்த்து வந்த விசரும், விசரில் வந்த நெஞ்செரிவும்

பக்-4 தோழர் சீ.குணசிங்கம் அவர்களின் அன்புத் தாயார் திருமதி இராசலட்சுமி அவர்கள் காலமானார்.

பக்-12



பக்-14,15

புத்தர்,
தமிழரல்ல:–,ஏன்
சிங்களமுமல்ல. –
அவர்

-எஸ். நஸீறுதீன்.-

# சாதியச் சூத்திரம்



ஒழுக்கம் பண்பு போன்றவைகளால் புறக்கணிக்கப்பட்டு வறுமையிலும் துன்பத்திலுமே வாழ்கை நடாத்தும் கோடானுகோடி மக்களின் சுக துக்கங்களைப் புரிந்துகொண்டு அவர்களின் போராட்டமயமான வாழ்வில் மின்ல்போல் தோன்றி மறையும் மனித உணர்வுகளுக்கு முழுவடிவம் கொடுக்கும் அதேவேளையில் அவர்களை இந்நிலைக்கு தள்ளிவிட்ட சுகபோக வர்க்கத்தினரின் கோரத்திரையை கிழித்தெறிந்து அம்பலப்படுத்துவது மனச்சாட்சியுள்ள எழுத்தாளனின் கடமையாகும்.

-கே.டானியில்-



வெளியீடு : அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபை

# வடு வின் பார்வையில்...



தற்போதைய இலங்கை அரசியலின் நகர்வில் பிரதான அம்சமாக இரண்டு விடயங்கள் 'வடு'வின் கவனத்திற்குள்ளாகின்றது.

**முதலாவது:** தமிழ் தேசியக் கூட்டமைப்பினரின் அமெரிக்கப் பிரயாணமும், அப்பிராயணங்களில் தமக்கு ஏற்பட்ட அனுகூலங்கள் குறித்து அவர்கள் கனடா, இலண்டன் போன்ற நாடுகளில் ஏற்பாடு செய்யப்பட்ட பத்திரிகையாளர் மாநாடுகளில் தெரிவித்த கருத்துக்கள்.

**இரண்டாவது:** இலங்கையின் ஆளுங்கட்சியான ஐக்கிய மக்கள் கூட்டமைப்பின் 7வது வரவு செலவுத்திட்டமும் அதுகுறித்த அபிப்பிராயங்களும்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் தாம் மேற்கொண்ட அமெரிக்கவிஜயம் குறித்து பத்திரிகை மாநாடுகளில் முன்வைத்த பதில்களானது அவர்களைப் பொறுத்தவகையில் மிக நிதானமாக, அவதானமாக, புத்திசாதுரியமாக நிகழ்த்தப்பட்ட ஓர் பிழைப்புவாத அரசியல். இவ்வாறான இவர்களது அரசியல் 'சாணக்கியப்' பதில்களை தமிழ் மக்கள் இன்று, நேற்று கேட்டுப்பழகியவர்களல்ல. சேர்.பொன்.அருணாசலம் முதல் சேர்.பொன் இராமநாதன், எஸ்.ஜே.வி.செல்வநாயகம், ஜீ.ஜீ.பொன்னம்பலம், அமிர்தலிங்கம் போன்றவர்கள் தமிழ் பேசும் மக்களுக்கான அரசியலென என்னவெல்லாம் பேசினார்களோ,எவ்வாறெல்லாம் நடந்துகொண்டார்களோ அதையே இன்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் பின்பற்றி வருகின்றனர்.

முன்னவர்கள் பகுதிநேரமாக புரிந்த அரசியல் ஊழியத்தை, (அப்புக்காத்து உத்தியோகத்தோடு) முழுநேரமாக ஊழியமாக மேற்கொண்டுவருகின்றனர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர். இவை மட்டுமே இவர்களுக்கிடையே நிலவிவரும் பேறுபாடுகளாகும்.

இவர்கள் முன் வைக்கப்பட்ட கேள்விகள் என்பது,

**-இலங்கைவாழ் ஒட்டுமொத்த மக்களின் சமூக நலன்களின் அடிப்படையில் அமைந்ததாக இருக்கவில்லை. தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் நீங்கள் தானா?**

**-பான் கீமூன் அவர்களை உங்களால் சந்திக்க முடியாது போனதற்கு இலங்கை அரசாங்கம் பின்னணியில் செயல்பட்டதா?**

**-வேறு தமிழ் கட்சிகளுடன் அரசாங்கம் தீர்வு குறித்துப் பேசலாமா?**

போன்ற கேள்விகளே முன்வைக்கப்பட்டது. இவ்வாறான கேள்விகளுக்கு அளிக்கப்பட்டபதில்கள்:

"எங்களுடைய மண்ணில் எங்கட மக்கள் ஆட்சிசெய்ய வேண்டும்" (மாவை சேனாதிராஜா)

"எங்களை சர்வதேசம் அழைத்து பேசும்போது திக்குத் தடுமாறுகின்றது இலங்கை அரசாங்கம். எந்த தமிழ் கட்சிகளையும் தமிழ் மக்கள் தேர்வு செய்யவில்லை. அதற்காக நாங்கள் மட்டும் தான் பிரதிநிதிகள் என்று நாங்கள் ஒருபோதும் கூறவில்லை. ஆனால் எங்களை விடுத்து தமிழ் கட்சிகளோடு பேசுவதற்கு தமிழ் கட்சிகள் அங்கு யாரும் இல்லை. ஆகவே தமிழ் மக்களின் நலன் குறித்தோ அவர்கள் அரசியல் குறித்தோ பேசவேண்டியது தமிழ் கூட்டமைப்போடு மட்டும்தான்" (!!!) (சுமந்திரன்)

"இது வந்து பாருங்கோ தமிழ் மக்களின் பிரச்சனைகளை தீர்பதற்கான முதலாவது படி(!) தமிழ் மக்கள் மீது நிகழ்த்தப்பட்ட யுத்தத்தின் விசாரணையும், அதன் உண்மைத்தன்மைகளை அறிவதென்பதும் ஒட்டுமொத்தமான தீர்வுக்கான தேவைகளை உருவாக்கும். அந்த அடிப்படையில் இந்தப்பயணம் மிக முக்கியமானது. எடுத்த எடுப்பில் எதுவும் நடந்து விடாது. காலம் கனிந்து வரும்போது மாற்றங்கள் நிலவும். தமிழ் மக்கள் எங்களிடம் ஆணையைத் தந்திருக்கின்றார்கள். அந்த ஆணையை நிறைவேற்ற வேண்டிய கடமை எமக்கிருக்கின்றது. தமிழ் மக்கள் தலை நிமிர்ந்து வாழவேண்டும். தங்களுடைய காரியங்களை தாங்களே செய்யவேண்டும்." (சுரேஸ்

பிரேமச்சந்திரன்)

அரசியில் தீர்வு அடையவேண்டி ஏறுவதற்கு மொத்தம் எத்தனை படிகள் உள்ளது என்பதை முதலில் அரசியல்வாதிகள் மக்களுக்கு சொல்லிவிட்டு ஒவ்வொரு படியாக ஏறுவது நல்லது. மக்களுக்கு நீண்டகாலமாக முதல்படி தான் காட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

மேற்படி தமிழ்கூட்டமைப்பினது உரையாடல்களில் இருக்கும் அரசியலையும், இவர்களது சிந்தனையில் இருக்கக்கூடிய தொடர்ச்சியான இனவாத, பிரிவினைவாதக் கூறுகளையும் மக்கள் இனம் காணவேண்டும். இலங்கை ஜனாதிபதி அவர்கள் பாராளுமன்றத்தில் 2012 ஆம் ஆண்டிற்கான 7வது வரவு செலவு திட்டத்தை முன்வைத்துபேச முற்பட்டபோது பாராளுமன்றத்தில் நிகழ்ந்த முறைகேடுகள் குறித்த நியாய-அநியாயங்களை நாம் தேடவேண்டிய அவசியமில்லை. ஏனெனில் பாராளுமன்றம் என்பது 'பண்டிகள் வாழும் தொழுவம்' என்பதை அன்றே சொன்னவர் தந்தை பெரியார். இவ்வாறான அநாகரிகமான செயல்களில் ஆளும்கட்சி, எதிர்க்கட்சி என்றோ, முற்போக்கு, பிற்போக்கு என்றோ வேறுபாடுகள் இருப்பதில்லை. இவ்வாறான சம்பவங்கள் மேற்கு நாடுகளிலும் நிகழ்ந்து கொண்டிருப்பதை நாம் அவதானித்தே வருகின்றோம்.

இருந்தபோதும் முன்வைக்கப்பட்ட நாட்டின் வரவு செலவுத்திட்டம் குறித்து பொருளாதாரப் பின்னணியில் எந்த விதமான ஆய்வுகளையும் இதுவரையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் மேற்கொள்ளவில்லை. ஜனாதிபதியின் வரவு செலவுத்திட்ட உரையில் எந்தவித குழப்பமும், எதிர்ப்பும் ஏற்படுத்த முனையவில்லை என்ற காரணத்திற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை பாராட்டியதோடு அதற்காக அவர்களுக்கு விருந்துபசாரமும் வழங்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சியைச் சேர்ந்த திருமதி விஜயகலா மகேஸ்வரன் அவர்கள் வரவு செலவுத்திட்டத்தில் முன்வைக்கப்பட்ட அரச உத்தியோகத்தவர்களுக்கான சம்பள உயர்வு குறித்துப் பாராட்டியிருக்கின்றார். அத்தோடு வரவு செலவுத்திட்டத்தில் உள்ள குறைபாடுகள் என பலவிடயங்களை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளார். குறிப்பாக தனியார் துறை ஊழிர்களின் சம்பள உயர்வு அத்தொழிலாளர்களின் மேம்பாடுகள் குறித்து அரசாங்கம் அக்கறை கொள்ளாததை மிகப்பெரிய குறைபாடெனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

பல்கலைக்கழக பொருளியல்துறை விரிவுரையாளர் எஸ்.விஜயச்சந்திரன் அவர்கள் வரவு செலவுத்திட்டம் குறித்த கருத்துத் தெரிவிக்கையில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் போன்ற மொழிகளின் வளர்ச்சிக்காக அரசாங்கம் தற்போதைய வரவு செலவுத்திட்டத்தில் 150 மில்லியன் ரூபாய் ஒதுக்கியிருப்பதானது பாராட்டுக்குரிய விடயமாக கருதுகின்றார். இலங்கையிலுள்ள மொழிப்பிரச்சனையே இனப்பிரச்சனைக்கான அடிப்படைக்காரணம். சிங்களமும் தமிழும் இலங்கையிலுள்ள மக்கள் அனைவராலும் சரளமாக பேசப்படும் நிலைதோன்றும் பட்சத்தில் இனப்பிரச்சனைக்கு இடமிருக்காது எனவும் நம்புகின்றார். எனவே அந்தவகையில் அனைத்து மொழி வளர்ச்சியை கருத்தில்கொண்ட வரவு செலவுத்திட்டம் என்ற வகையில் இது பாராட்டுக்குரியதாக கருதுகின்றார்.

இவ்வரவு செலவுத் திட்டமானது தமிழ் பேசும் மக்களின் எதிர்கால அரசியல் நலங்களுக்கு எவ்வகையில் பயன் உள்ளது என்பது குறித்து தமிழ் அரசியல் கட்சிகள் எதுவும் தகுந்த ஆய்வுகளை மேற்கொள்ளவில்லை.

❍

**வடு வாசகர்களுக்கு....**

**"வடு" பத்திரிகைக்கான கதை, கவிதை, கட்டுரை மற்றும் தகவல்கள் போன்ற ஆக்கங்களையும் விமர்சனங்களையும் உங்களிடம் இருந்து எதிர்பார்க்கின்றோம்.**

**தொடர்புகட்கு:-**

**இலங்கைக்கு:-**

**'VADU'**
**N.THAMIL ALAGAM**
**'MALAR VASA'**
**NORTH, URUMPIRAI**
**URUMPIRAI**

**Vadusrilanka@gmail.com**

**புலம் பெயர் நாடுகளுக்கு:**

**'VADU'**
**F.D.S.D.S**
**70,SQUAREDESSAUVES**
**95140 GARGESLESGONESSE**
**FRANCE**
**VADU.WARLD@hotmail.fr**

# தோழர் சீ.குணசிங்கம் அவர்களின் அன்புத்தாயார்
# திருமதி இராசலட்சுமி

சாதிய,சமூக ஒடுக்குமுறைகளுக்கெதிராக அன்று தொடக்கம் இன்றுவரை போராடி வரும் தோழர்.சீ.குணசிங்கம் அவர்களின் அன்புத் தாயார் திருமதி.சீ.இராசலட்சுமி அவர்கள் தனது 82 வது வயதில் (12.11.2011) காலமானார். அன்னாரின் இறுதி அஞ்சலி நிகழ்வில் அரசியல் பிரமுகர்கள், கல்விமான்கள், சாதியத்திற்கு எதிராக போராடிவரும் சமூகப்போராளிகள் என திரளான மக்கள் கூட்டம் கலந்து கொண்டதை காணக்கூடியதாக இருந்தது.

அவரது இறுதிச் சடங்கில் கலந்துகொண்ட பலரும் அவருக்கான அஞ்சலி உரையை நிகழ்த்தினார்கள். திருமதி இராசலட்சுமி அவர்கள் சாதிய ஒடுக்குமுறைக்கெதிரான போராட்டங்களில் மேற்கொண்ட பங்களிப்புகள் குறித்த தகவல்களை அங்கு நிகழத்தப்பட்ட அஞ்லி உரைகள் மூலமாக பலரும் அறியக்கூடியதாக இருந்தது.

**சாதிய ஒடுக்குமுறைக்கெதிராக பல்வேறுபோராட்டங்களில் பங்கு கொண்டவரும், அடித்தட்டு மக்களுக்காக இன்றுவரை தனது அரசியல் செயல்பாடுகளை மேற்கொண்டு வருபவருமான தோழர் சீ.குணசிங்கம் அவர்களின் அன்புத்தாயார் திருமதி இராசலட்சுமி அவர்கள் காலமானார்.**

“சமூக ஒடுக்குமுறைகளுக்கெதிராக நாங்கள் போராடிய காலங்களில் எம்மை ஆதரித்து அன்புடன் உபசரித்து வந்தவர் இராசலட்சுமி அவர்கள். நாம் எந்த வேளையில் அவரது இல்லத்திற்கு சென்றாலும் எம்மை சாப்பிடச்சொல்லி வற்புறுத்துவதையே வழமையாகக் கொண்டிருந்தார். வீடுதேடி வரும் அனைவரையும் தனது பிள்ளைகள் போல் பாசத்துடன் அரவணைத்துப் பழகுவார். எமது போராட்டங்களுக்கு ஆதரவாகவும், உற்சாகமும் அளித்து வந்தவர். ஒடுக்கப்பட்ட சமூகத்துள் முன்னுதாரணமாக வாழ்ந்து வந்தவர் என்பது எம்மில் பலருக்கும் தெரிந்த விடயம்.” என்பதாக சமூக விடுதலைப் போராளியும் தெங்குப் பனம் பொருள் உற்பத்திச்சபையின் தலைவருமான திரு.பசுபதி.சீவரத்தினம் அவர்கள் தனது அஞ்சலி உரையில் தெரிவித்தார்.

“சாதாரணமான குடும்பத்தைச்சேர்ந்த திருமதி இராசலட்சுமி அவர்களின் இறுதி அஞ்சலியில் கலந்து கொள்வதற்காக பல அறிஞர்களும், பிரமுகர்களும் சமூகமளித்துள்ளதைக் காணும் போது பெருமையாகவே உள்ளது. இது ஓர் சாதாரண நிகழ்வல்ல. இவர் ஓர் அசாதாரணமான தாய். இந்த வீரத்தாய் பெற்றெடுத்த புதல்வர்களில் திரு.சீ.குணசிங்கம் அவர்களின் சமூகப் பணிகளும், ஒடுக்கப்பட்ட சமூகங்களைச் சார்ந்த மக்கள் மீது தோழர்.குணசிங்கம் கொண்ட பற்றும் பாராட்டப்படவேண்டியது. அடக்குமுறைச் சாதியினரின் கொடுமைகளுக்கு எதிராக ‘அடித்தால் திருப்பி அடி’ என்பதையே தனது சாதிய எதிர்ப்பு கொளகையாக பேணிவந்தவர் தோழர் எஸ்.ரி.என். நாகரட்ணம் அவர்கள். அவரது பாசறையில் வளர்ந்தவர் தோழர்.சீ.குணசிங்கம் அவர்கள். அவர் தனது வாழ் நாளில் பல நாட்கள் பகல்நேரங்களில் தூங்குவதும், இரவு நேரங்களில் விழித்திருப்பதுமாக வாழ்ந்தவர். ஒடுக்குமுறைச் சாதியினருக்கு எதிரான கலகங்களில் ஈடுபட்டதால் குணசிங்கம் அவர்கள் இரவு நேரங்களில் விழித்திருந்து தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்துவந்தவர்.அவரை கண்ணை இமை காப்பதுபோல் காத்து வந்தவர் அன்னை இராசலட்சுமி அவர்கள்.இந்த வீரப்புதல்வனை பெற்றெடுத்த அன்னைக்கு இங்கு அஞ்சலி செலுத்துவதை நான் பெருமையாக கருதுகின்றேன்.” என யாழ்.மாவட்டச் செயலக உத்தியோகத்தரும்,சிறுபான்மைத் தமிழர் மகாசபை நிர்வாகசபை உறுப்பினருமான திரு.சி.மகாலிங்கம் அவர்கள் உரையாற்றினார்.

“சமூகத்தின் மேம்பாட்டிற்காகவும், சாதிய சமூக ஒடுக்குமுறைக்கெதிராகவும் பலபோராட்டங்களில் நேரடிப் பங்குபற்றியவர் திரு.குணசிங்கம் அவர்கள். அப்புதல்வனை பெற்றெடுத்ததோடல்லாது, அவரது பணிகள் அனைத்திற்கும் துணையாகவும், பக்கபலமாகவும் இருந்ததன் மூலம், தன்னையும்

# 35 வருடங்களாகியும் திருத்தப்படாத வீதி

நாவற்குளி பாடசாலை வீதி பலதசாப்தங்களாக திருத்தப்படாமல் உள்ளது.

கிராமசபை அதிகாரி ஊடாகவும், உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், பிரதேசமக்கள் எனப் பலராலும் பிரதேச சபைக்கும், ஆளுனருக்கும், அரசியல் தலைவர்கள் என அனைவருக்கும் பத்துவருடங்களுக்கு மேலாக பாதை திருத்தப்படவேண்டுமென்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இருந்தபோதும் இதுவரை அதற்கான எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. 35 வருடங்களாக இவ்வீதி திருத்தப்படாமலே உள்ளது.

நாவற்குளி மகாவித்தியாலயத்தின் முன்பாக தொடங்கும் இரண்டரைக் கிலோமீற்றர் நீளமான தார்வீதி கடற்கரையூடாக நாவற்குளி இந்து மயானத்தில் சென்று முடிவடைகிறது. மயானத்துக்குச் செல்பவர்கள் மட்டுமன்றி இரண்டு கிராமங்களைச் சேர்ந்த 150 ற்கும் மேற்பட்டகுடும்பங்கள் இதனையே பிரதான வீதியாகப் பயன்படுத்துகிறார்கள்.

பாடசாலைவீதி என்பதனால் இவ்வீதி ஊடாகவே பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் அனைவரும் பயணம் செய்யவேண்டிய தேவையுள்ளது. மழைக்காலங்களில் குளிகளில் தேங்கி நிற்கும் வெள்ளத்தால் வாகனங்கள் மட்டுமன்றி, பாதசாரிகள் கூட நடந்து செல்லமுடியாத நிலையே காணப்படுகிறது.

2002ஆம் ஆண்டு இடப்பெயர்வைத் தொடர்ந்து மிகவும் சேதமடைந்துள்ள இவ் வீதியில் திடீரென புதிதாக முளைத்துள்ள இராணுவ முகாமிற்கு வந்து செல்லும் கனரக வாகனங்களினால் தற்போது பாவிபக்கப்பட முடியாத நிலையே காணப்படுகிறது.

தலித் மக்கள் அதிகமாக வாழ்வதனாலா இவ்வீதி தொடர்ந்தும் திருத்தப்படாமல் உள்ளது? என்ற கேள்வி எழுவது தவிர்க்கமுடியாதுள்ளது.

ஒப்பற்ற ஓர் சமுகப்போராளியாக மாற்றிக்கொண்டவர் அன்னை இராசலட்சுமி அவர்கள். அத்தாயின் பெருமைகள் வெறும் பாராட்டுக்குள் அடங்கிவிடாது. ஒடுக்கப்பட்ட மக்களின் உயர்விற்காகவும், பல அரசியற் செயற்பாடுகளிலும் இன்று முன்னிலை வகிக்கும் திரு.குணசிங்கம் அவர்களைப் பெற்று வளர்த்தெடுத்த அன்னைக்கு எனது அஞ்சலியை செலுத்துவதோடு அவரது துயரில் வாடும் பிள்ளைகள் உறவினர்களுக்கும் எனது அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றேன்.”என பல்கலைக் கழக விரிவுரையாளரான திரு.க.கமலேஸ்வரன் அவர்கள் தனது அஞ்சலி உரையில் குறிப்பிட்டார்.

“திரு.குணசிங்கம் அவர்கள் இன்று பல அமைப்புக்களிலும், நிறுவனங்களிலும் முதன்மை வகிப்பதற்கும், சமுக விடுதலைக்காக இன்றுவரை தன்னை அர்ப்பணித்துப் போராடி வருவதற்கும் அவரின் தாயாரின் பங்களிப்பும், ஆதரவுமே அவருக்குத் துணையாகவும் பலமாகவும் இருந்துள்ளது. எனவே அப்பேற்பட்ட அத்தாயின் ஆத்மா சாந்திபெற வேண்டுகின்றேன்.” என மட்டுவில் மகாவித்தியாலய அதிபரும், யாழ்.போதனா வைத்தியசாலை பேரவை உறுப்பினருமான திரு.எம்.பாலசுப்பிரமணியம் அவர்கள் பேசினார்.

“தனக்கென வாழாது பிறருக்காக வாழுகின்ற, ஓர் சமுக விடுதலைப் போராளியைப் பெற்றுத் தந்தவர் இந்தத் தாய். திரு.குணசிங்கம் அவர்கள் அன்று தொட்டு இன்று வரை ஓர் சமூகவிடுதலைப் போராளியாகவே இருந்து வருகிறார். இவரது துயரத்தில் நாமும் பங்குகொள்வதோடு அவரது உற்றார் உறவினர்களுக்கும் எனது அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றேன்.” என வலி.கிழக்கு மத்தியஸ்தர் சபை தலைவர். திரு.மயில்வாகனம் அவர்கள் தனது அஞ்சலி உரையில் தெரிவித்தார்.

மேலும் ஓய்வுபெற்ற வங்கியாளர் திரு.சின்னராசா, கிராம சேவையாளர் திரு.சந்திரசேகரம், அல்வாய் நக்கீரன் ச.ச.நி.தலைவர், குப்பிளான் தெற்கு அறிவொளி ச.ச.நி.தலைவர், வடமராட்சி வாகன உரிமையாளர் சங்க உறுப்பினர் எனப் பலரும் தமது அஞ்சலியுரைகளை நிகழ்த்தினர்.

# கேள்விக்கிடமாகும் தலித்துக்களின் கல்வி



ஒடுக்கப்பட்ட கிராமங்களில் வாழும் மக்களின் கல்வி இன்னமும் முன்னேற்றமடையாமல் உள்ளது. க.பொ.த.சாதாரண தரம் சித்தி அடைய முடியாதவர்கள் மேற்படிப்பிற்கான தகுதியை இழந்து போகின்றனர். இவர்களில் அதிகமாகக் கல்வியை இடை நிறுத்துபவர்கள் தலித் சமூகத்தைச் சேர்ந்தவர்களாகவே உள்ளனர் என்பது கவலைக்குரிய விடயமாகவே உள்ளது. இருந்தபோதும் சாதாரண கல்வித் தகைமைகளுடன் தொழிற் கல்விகளை மேற்கொள்ளக் கூடிய வாய்ப்புக்கள் அதிகமாகவே உள்ளன.

ஆனால் அவற்றில் அக்கறையின்றி வெளிநாடு செல்வதற்கே இவர்கள் அதிக அக்கறை காட்டி வருகிறார்கள். கல்வி கற்பதற்கு மாணவர்கள் தயாராக இருந்தாலும் கல்விக்காக பணத்தைச் செலவளிப்பதற்கு அதிகமான பெற்றோர் தயாராக இல்லை. மாறாக வெளிநாடு செல்வதற்காக பல இலட்சம் பணத்தைக் கொடுத்து ஏமாந்து போகிறார்கள். வெளிநாட்டுமோகம் கல்வியைத்தொடர்வதற்கு இடையூறாகவே இருந்து வருகின்றது.

இச்சமூகத்திலுள்ள பெண் பிள்ளைகள் கல்வி கற்பதில் அதிக அக்கறை காட்டி வருகிறார்கள். இருப்பினும் விடலைச் சிறுவர்கள் பெண்களின் கல்வி வளர்ச்சிக்கு தடையாகவே இருந்து வருகின்றனர். பாடசாலைக்கும், மாலை நேர வகுப்புக்களிற்கும் சென்று வரும் மாணவிகளை வீதிகளில் நின்று தகாத வார்த்தைகளாலும், செயல்களாலும் வெறுப்படையச் செய்து வருகிறார்கள்.

இயற்கையான பருவத்தூண்டுதலால் பல பெண்கள் காதலில் வீழ்வதோடு தமது கல்வியையும் இடைநிறுத்திவிடுகின்றனர். ஆண்,பெண் நட்பு-உறவுகள் குறித்த கல்வியும், உரையாடல்களும் எமது சமூகத்திற்கும் குறிப்பாக பெண்களின் மேம்பாட்டிற்கு மிக அவசியமாக உள்ளது.

வெளிநாடுகளில் இருப்பவர்கள் இலங்கையில் உள்ள தமது உறவுகளுடன் இலகுவாகத் தொடர்பு கொள்ளவதெற்கென நவீன கைத் தொலைபேசிகளை அனுப்பி வைக்கின்றனர். அவ்வாறான கைத்தொலைபேசிகளை பெற்றோர்களால் கையாள முடியாததால் தமது பிள்ளைகளிடமே உபயோகத்திற்காக கொடுத்துவிடுகின்றனர். கல்விகற்று வரும் சிறுவர்களான அவர்கள் தவறான வழிகளில் தொலைபேசிகளை பயன்படுத்தி வருகின்றனர். தொலைபேசியினூடான இணையத் தொடர்புகளால் வயதிற்கு மீறிய காட்சிகளையும், படங்களையும் பார்ப்பதில் மட்டுமே அக்கறை செலுத்திவருகிறார்கள். அதனால் அவர்களது கல்விகற்பதற்கான ஆவல் குறைந்து வருகின்றது. கைத்தொலைபேசிகளின் தொழில்நுட்ப செயல்பாடுகளை அறியாத பெற்றோர்களால் பிள்ளைகளைக் கட்டுப்படுத்த முடியாதும் போய்விடுகிறது. தங்களை அறியாமலேயே பிள்ளைகளின் அழிவிற்கு பெற்றோர்களே காரணமாகிவிடும் அவலமும் நிகழ்ந்து விடுகின்றது.

கூலித்தொழிலாளர்களின் பிள்ளைகளின் நிலமை வேறுவகையில் உள்ளது. பிள்ளைகளின் கல்வி சம்பந்தமாக இவர்களால் எதுவுமே செய்யமுடியாத நிலை. காரணம்: பெற்றோர் இருவரும் காலையில் கூலித் தொழிலுக்குச் சென்றால் மாலையில்தான் வீடு திரும்புவார்கள். அதனால் பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்கிறார்களா இல்லையா என்பதும் அவர்களின் கல்வி நிலை என்ன என்பதையும் அப்பெற்றோர்களால் அறிய முடியாதுள்ளது. அது மட்டுமன்றி வேலைக்குச் செல்லும் தகப்பன் நெடுநேரம் கழித்து இரவில்

தான் வீட்டுக்கு வருவார். அதுவும் ஒரு ஆளாக வருவதில்லை இரண்டு, மூன்று பேராகத்தான் வருவார். கசிப்பு சாராயம்,கள்ளு என மூன்று அவதாரம் எடுத்து வருவார். வந்ததும் மனைவி,பிள்ளைகளுடன் கத்திச் சண்டைபிடித்து வீரம் காட்டவே அவரால் முடியும். இந்நிலையில் பிள்ளைகள் எப்படிக் கல்வியைத் தொடர முடியும். வீட்டுச் சூழல் இப்படியாக அமைந்திருந்தால் பிள்ளைகளின் எதிர்காலம் என்ன ஆகும்? பிள்ளைகளிற்கு அப்பால் பெற்றோர்களுக்கான கல்வியும் அவர்களுக்கு ஆலோசனைகளும் வழங்கும் அமைப்புகள் கிராமம்தோறும் உருவாகவேண்டும்.

எமது தலித் சமூக மேம்பாட்டு
முன்னணியின் இணையத்தள முகவரி
Thuuu.net
காண்பதிலுள்ள காணாததைக் காண்போம்.

# சக்தி மிக்க மின்சாரம் வழங்குவதில் தாமதம் ஏன்?

சரஸ்வதி சனசமூகநிலையம் உரும்பிராய் வடக்குப் பகுதிக்கு வழங்கப்பட்டு வரும் மின் வலுவினை அதிகரிக்கும்படி சுன்னாகம் மின்சாரசபைக்கு விண்ணப்பங்கள் வழங்கப்பட்டு பல மாதங்களாகியும் அதற்கான நடவடிக்கைகள் எதுவும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

அப்பகுதியில் 200ற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மின்சாரத்தைப் பயன்படுத்துகின்றபோதும் ஆறு வருடங்களுக்கு முன் வழங்கப்பட்ட மின் சக்தியின் அளவே தற்போதும் வழங்கப்பட்டு வருகின்றது. மின் பாவனையாளரின் அதிகரிப்புக்கு ஏற்றவாறு மின்சக்தி திருப்தியற்ற முறையில் கிடைப்பதனால் கணணிகள், நீர் இறைக்கும் இயந்திரம் என்பவற்றைப் பயன்படுத்த முடியாதுள்ளதுடன் மின்குமிழ்களின் குறைந்த ஒளியினால் மாணவர்களின் கல்வியும் பாதிப்படைகின்றது.

இவற்றை கருத்தில் கொண்டு தமது பகுதிக்கு போதிய மின்சக்தியை வழங்கும்படி அப்பகுதி மக்களால் சுன்னாகம் மின்சார சபைக்கு விண்ணப்பங்கள் வழங்கப்பட்டன. எனினும் இப்பகுதிக்கு வரும் மின்சாரம் குறிப்பாக உயர்சாதியினரின் பகுதியுடன் நின்றுவிட்டதும் குறிப்பிடத்தக்கதாகும். மின்சாரசபை இவ்விடயத்தில் கவனம் செலுத்தி தம் வேண்டுகோளை உடனடியாக பூர்த்தி செய்ய வேண்டுமென பிரதேச மக்கள் அனைவரும் கேட்டுள்ளனர்.



# அண்மைக்காலமாக தமிழ் சினிமா பார்த்து வந்த விசரும் விசரில் வந்த நெஞ்செரிவும்

**-கற்சுறா-**

குறிப்பாக தமிழ்ச் சினிமா குறித்த விமர்சனம் என்பதே மிக சிக்கலானது.இங்கு தமிழ்த் திரையுலகின் வெகுஜன இயக்குனர்கள் எனப்படுபவர்களின் சமூகப்பார்வைகள் குறித்த கருத்தியல் என்ன என்பது கேள்விக்குட்படுத்தப்படாத நிலை தொடர்கின்றது. இவ்வாறான வெறும் ரசிகமனம் மிக ஆபத்தானது. இந்த ரசிகமனமே வன்முறையைக் கொண்டாடவும், வன்முறை அரசியல் அதிகாரத்தை வழிபடவும், சாதிய படிநிலையை பேணவும் துணை போகின்றது.

இன்றைய சினிமாக்கள் நமது குழந்தைகளையே அதிகம் பாதிக்கின்றது. இவ்வாறான மனநிலை தாம் நினைக்கமுடியாத அடைய முடியாத கற்பனைச் சாத்தியப்பாடுகளை சினிமா மூலம் அடைய நினைக்கின்றது. இது அதிகமான தருணங்களில் ஆபத்திலேயே முடிகின்றது. தமிழ்ச்சினிமாவின் ஆரம்பகாலம் தொட்டு இன்றுவரை சமூக அக்கறைக்கு எதிராகவே அதிகமான சினிமாக்கள் உருவாகியிருக்கிறது. நாங்கள் வணிக சினிமா தான் எடுக்கிறோம் அதில் மக்களின் கற்பனைக் கெட்டாத விடயங்களைக் கொடுத்தால்தான் அது வெற்றியடையும் என்று சொல்லும் பல இயக்குனர்களை தமிழ் சினிமா கண்டிருக்கிறது. ஆனால் மிக மோசமான கருத்தியல்களை சினிமா மூலம் பரப்பும் சில இயக்குனர்களை நாம் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது. அதற்கு இடம் கொடுக்கவும் முடியாது.

நீங்கள் பெரியதிரையிலும் சின்னத் திரையிலும் கொடிகட்டிப்பறந்தவர். இரண்டிற்கும் இடையில் என்ன வித்தியாசத்தைக் காண்கிறீர்கள் என்று அண்மையில் பாலச்சந்தரிடம் ஒரு நண்பர் கேட்டிருந்தார். அதற்கு அந்தப் பெரிய டைரக்கடர் சொல்லும் அற்புதமான விளக்கம்: பெரிய திரைக்குப் பாடலும் காட்சியும் தேவைப்படுகின்றது. சின்னத் திரைக்கு அந்த தேவை இருப்பதில்லை. என்பதாக பதிலளித்திருந்தார்.



இப்படிச்சொல்லும் பாலச்சந்தர் பாருங்கோ சின்னத் திரைக்கும் பாட்டுப் போட்டு அசத்தியவர். எப்படி அவர் தன்னால் முடிந்தவரை தமிழ் சினிமா என்பதை கெடுத்துக் குட்டிச்சுவராக்கினாரோ அதேபோல் சின்னத்திரையையும் கெடுத்தார். கையளவு மனசு, மர்மதேசம் என்று ஆரம்பகாலங்களில் பண்ணிய அலுப்புத்தனம் கொஞ்சமல்ல. அதற்குமப்பால் குடும்பச்சித்திரம் எடுக்கிறேன் எனச்சொல்லி குடும்பத்தின் அனைத்துக் குளறுபடிகளையும் புனிதமாக்கி பார்ப்பனியக் கலாசார முலாம் பூசியவர் அவர்.

நல்ல தமிழ் இயக்குனர் பெயர் என்ன என்று தமிழ் சினிமா மோகத்தால் பாதிக்கப்ட்ட மனநோயாளி ஒருவரிடம் கேட்டால் பா... பா... பா... பா... என்ற ஓசைநயத்தில் (பாலச்சந்தர், பாக்கியராஜா, பாராதிராஜா, பாலு மகேந்திரா) வாய் கிழிய சொல்லக் கூடிய நிலையில் தான் தமிழ் சினிமா இருக்கிறது. ஆனால் நல்லவேளை இந்த 'பா...'க்கள் எல்லாம் இன்று ஓரளவுக்கு ஓய்வெடுக்கப் போய்விட்டார்கள். இதை ஓய்வெடுப்பு எனச் சொல்வதை விட சீனு இரமசாமி, மிஷ்கின், சுசீந்திரன், கரு பழநியப்பன், களஞ்சியம் போன்றவர்களுக்கு முன்னால் நிற்பதற்கான கூச்சம் எனத்தான் கொள்ளவேண்டும். இதை விட தமிழ்சினிமாவின் அதிகூடிய கேவலம் என்னவென்றால் நல்லதொரு நடிகனாக இன்னும் கமலகாசனுடைய பெயர் இருந்து கொண்டிருப்பதுதான். தமிழ் சினிமாவில் கமலகாசன் நடிகனாகவோ அல்லது இயக்குனராகவோ வெளிப்படும் சந்தர்ப்பங்களில் தன்னுடைய அசிங்கத்தனங்களை முன்நிறுத்த தயங்குவதில்லை. அவர் தன்னை அக்கிரகாரத்திலிருந்து பெரியார் திடலுக்கு வந்தவன் என்று சொல்லிக் கொண்டாலும் அவருடைய சினிமாக்களில் அவரையும் மீறி அவருடைய



உள்ளுணர்வு வெளிப்பட்டுவிடும். இதற்கு நல்லதொரு உதாரணாக தசாவதாரம், உன்னைப்போல் ஒருவன் படங்களை கூறலாம். தசாவதாரம் திரைப்படம் குறித்து இயக்குனர் தீசுமாசு கருத்து தெரிவிக்கையில் கமலகாசன் பீயிற்குள் கல்லுப் பொறுக்கியிருக்கிறார் என்று சொல்லியிருந்தார். சமூகத்தில் இருக்கின்ற ஆதிக்கசாதியினருக்குச் சேவகம் செய்து அவர்களைக்காப்பாற்ற செத்துமடிய வேண்டியவர்களாக தலித் மக்களைத் தசாவதாரத்தில் சித்தரித்திருப்பது கமலகாசனது உச்ச முட்டாள்தனம். ஆனால் நாம் என்னவோ அவரை உலக நாயகனாகவே போற்றிக் கொண்டிருக்கிறோம்.

கடந்த சில காலங்களாக ஈழ அரசியல் தமிழ் நாட்டு அரசியல் வாதிகளின் வாய்க்கு அவலானதுபோல் இன்று தமிழகத்து சினிமாக்காரர்கள் தமிழ்ஈழ அரசியலை திண்டு தண்ணி குடிக்கிறார்கள். எந்த நடிகரைப் பார்த்தாலும் தமது சினிமாத் தொழிலைவிட ஈழ அரசியல் பேசுவதிலே குறியாய் நிற்கிறார்கள். டி.ராஜேந்தர் தொடக்கம் இன்றை அமீர், சீமான் வரை இதுதான் பேச்சு. அனைவருக்குள்ளும் இருக்கும் இன உணர்வு, தமிழ் உணர்வு, தேசிய உணர்வு என்பதெல்லாம் பிற இனங்கள் மீதுகொண்ட விரோதமாகவே வெளிப்படுகிறது. பிற இனங்கள் மீதான இவர்களது தொடர்ச்சியான மொழிப்பிரயோகங்ளை அவதானிப்பவர்களால் அவற்றை புரிந்து கொள்ள முடியும். அதற்குமப்பால் இவர்களுடைய தேசிய உணர்வும், தமிழின உணர்வும் வெறுமனே பணம் பண்ணும் நோக்கத்திற்கப்பால் எதையும் தாண்டுவதில்லை. பாருங்கள் கமலகாசனின் தெனாலி தொடக்கம் நந்தாவின் காற்றுக்கென்னவேலி, இன்று ஏழாம் அறிவு வரை ஈழத்தமிழர்கள் குறித்து பேசும்போது ஈழத்தமிழர்களையும் விசிலடிக்க வைத்து காசுபறிக்கும் செயற்பாட்டுக்கப்பால் அவை எதையும் சாதித்து விடவில்லை.

ஆறறிவேயற்ற ஒரு இனம் ஏழாம்அறிவுக்கு விசிலடிக்கிறது எனில் குறைபாடு யாருடையது? இந்த அறிவுதான் இன்று வேலாயுதம் பட கட்டவுட்டிற்கு யாழ்ப்பாணத்தில் பால்வார்க்கும் நிலைக்குக் கொண்டுவந்து விட்டிருக்கிறது. எப்போதும் உணர்ச்சிகளுக்குள்ளும் கொந்தளிப்புகளுக்குள்ளும் வாழப்பழகிவிட்டிருக்கும் ஒரு இனத்தினை கடவுளின் பெயராலும், இனத்தின் பெயராலும்,தேசியத்தின் பெயராலும் ஏமாற்றி இலகுவாக அடிமைப்படுத்திவிடமுடியும்.



கடந்த கால் நூற்றாண்டாக பதட்டத்துடனும், மரணத்துடனும் அலைந்தவர்களை, வாழ்வின் கொடிய பக்கங்களை அனுபவமாகப் பெற்றவர்களை இன்று சீமானும், அமீரும், பாரதிராஜாவும், டி.ராஜேந்தரும், சத்தியராசும் இலகுவாக உணர்சியேற்றிவிடக்கூடிய நிலை உருவாகியிருப்பது குறித்து கவலை கொள்ளாமல் இருக்கமுடியுமா?

எங்களின் கதைகளை கதை ஏதுமறியாத அவர்களிடமிருந்து கேட்கும் நிலையிலேயேதான் இன்னும் நாங்கள் இருக்கிறோம். விடுதலைப்புலிகளின் பின்துணையோடு வெளிவந்த ஆணிவேர் திரைப்படத்தில் கூட நந்தாவுக்கும் மதுமிதாவுக்குமிடையான ஒரு காதல் கதையைச் சொல்லித்தானே படத்தை நகர்த்தினார்கள் அவர்கள். பல இலட்சம் கதைகள் உள்ள நாங்கள் இன்னும் தமிழ்நாட்டுத் தேசவெறிக் கூத்தாடிகளின் கதைகளுக்கூடாகவே நமது கதையைத் தேட வேண்டியிருப்பது மாபெரும் அவலம் அல்லாமல் வேறு என்ன?



இன்று 'நாம் தமிழர் கட்சியில்' சேராதவர்கள் நல்ல தாய் தகப்பனுக்குப் பிறக்காதவன் என்று சீமான் பகிரங்கமாக பேசிவரும் ஆபத்தை யார் உணர்ந்தார்கள்? பெரியாரும், காமராசரும் வாழ்ந்து அரசியல் செய்த மண் என்று சொன்னால் நம்பவா முடிகிறது! அங்கிருந்து வரும் தமிழ்த் தேசிய வக்கிரத்தைப் பாருங்கள்? இவனெல்லாம் தமிழனின் தலைவன் என்றால்... சினிமாவின் மைந்தன் என்றால்... மக்கள் எப்படி உருப்படுவார்கள்? இந்த சீமானைத்தான் நமது மாபெரும் இயக்குனர் பாலுமகேந்திரா தன்னுடைய தம்பியாகத் தத்தெடுத்திருக்கிறார். யாருக்கெல்லாம் தலையில் வெறியேறுகிறது பாருங்கள். சினிமா எப்படி ஐயா உருப்படும்.

ஆனாலும் சுசீந்திரன் போன்றவர்களால் கதையற்ற ஒருகதையையும், கதாநாயகனற்ற

# பொன்னி ஆச்சி

உயர் சாதியினருக்கெதிரான கூலி உயர்வுப் போராட்டத்தில் தலைமைதாங்கிப்போராடி வெற்றிகண்ட பொன்னி ஆச்சி அவர்கள் தனது 102வது வயதில் காலமானார்.

1983ம் ஆண்டு புன்னாலைக்கட்டுவன் மத்தாலோடையில் உயர்சாதி வர்க்கத்தினரிடம் கூலி உயர்விற்கான போராட்டத்தில் தலைமை வகித்தவர் பொன்னி ஆச்சி. 48 நாட்கள் வரை வேலைக்குச் செல்லாது தொடர்ச்சியாகப் போராடினார். அப்போராட்டத்தில் பல்வேறு இடையூறுகளையும் எதிர்கொண்டு 3.50 சதமாக இருந்த நாளாந்தக் கூலியை 4.50 சதமாக பெறுவதற்கு காரணகர்தாவாக இருந்தவர் பொன்னி ஆச்சி.

தலித் பெண்ணான இவர் சாதிவெறியினருக்கு எதிராகப் போராடி வந்ததோடு. இவர் ஒரு சிறந்த மருத்துவிச்சியாகவும் இருந்தார். இவரிடம் காணப்பட்ட மருத்துவ ஆற்றலை அறிந்த யாழ் பிரசவ மருத்துவப் பிரிவினர் தமக்கு ஆலோசனை வழங்கும் பதவியில் இருக்கும்படி கேட்டபோதும் அவர் அதற்கு மறுத்துவிட்டார்.

இவரது தாயாரும் 100 வயது வரை வாழ்ந்தவர். தனது தாய்க்கு 11வது மகளாக பிறந்த பவளக்கொடி என்ற பெயரைக்கொண்ட பொன்னி ஆச்சி 19.10.2011 அன்று காலமானார். இவர் வழங்கிய மருத்துவப்பணியால் அப்பிரதேசத்தில் வாழ்ந்த தலித்மக்கள் மிகப்பயன்பெற்று வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



**மருத்துவச் சாதனை புரிந்த பொன்னி ஆச்சி 102வயது வரை வாழ்ந்தார்.**

---

**9ஆம் பக்க தொடர்ச்சி........**

ஒருவனையும் கொண்டு 'அழகர்சாமியின்குதிரை' என்ற மிகப் பெரிய சினிமாவைக் கொடுக்கக்கூடிய நிலையும் உருவாகித்தானிருக்கிறது. ஜப்பானிய மூலம் என்றாலும் தமிழகத்து மக்களது வாழ்வோடு நெருங்கி வந்து ஒரு தெருவைக் கதாநாயகனாக்கிய 'நந்தலாலா' மிஷ்கின் பல இயக்குனர்களை பதறடிக்கப்பண்ணித்தான் விட்டார். இவர்களிடம் இருக்கும் மிக முக்கியமான விடையம் மக்களின் அருகிலுள்ள கதைகளை அணுகுவது. கதைகளுக்காக சீனாவுக்கோ, அமெரிக்காவுக்கோ கதாநாயகர்களை அழைத்துச் செல்வதில்லை. 'தென்மேற்குப் பருவக்காற்று' திரைப்படம் ஆடு களவெடுத்து விற்றுப் பிழைக்கும் ஒரு குடும்பத்தின் கதை. அந்தத் திரைப்படம் தந்த கனத்திற்கு இன்னும் ஒருபடம் இல்லை. எமது வாழ்வோடு ஒட்டிய கதைகளைச் சொல்லத் துணிந்த சீனு ராமசாமிக்கும் 'மந்திரப்புன்னகை' கரு பழனியப்பனுக்கும் 'கருங்காலி' யின் மு.களஞ்சியத்திற்கு முன்னால் கமலகாசனோ அல்லது மணிரத்தினமோ, சங்கரோ தலை குனிந்து நடக்கவேண்டியவர்களே. அல்லது பாலச்சந்தரைப்போல் 'ஒத்துக்கொண்டு' இடத்தை விட்டு மாறவேண்டும். **மீண்டும் அழுத்தமாகச் சொல்லுகிறேன் பாருங்கோ இது தமிழ்ச்சினிமா குறித்த ஓர் விமர்சனம் அல்ல- 'நெஞ்செரிவு'**

-கற்சுறா-

# பாடசாலை செல்ல மறுக்கும் பானுஜா.

மூளை வளர்ச்சி குன்றியவர் என்று ஆசிரியர்கள் கூறிய காரணத்தால் பாடசாலை செல்ல மறுக்கிறார் யாழ் நாவற்குளி மகாவித்தியாலயம் தரம் 4இல் கல்வி கற்கும் செல்வி பானுஜா என்ற மாணவி.

மேற்படி பாடசாலையில் தரம் 5இல் கல்வி பயிலும் மணவன் ஒருவன் சுடுநீர்ப் போத்தலில் சுடுநீர் எடுத்து வருமாறு தனது ஆசிரியரினால் பணிக்கப்பட்டதனால் பாடசாலை சிற்றூண்டிச் சாலையிலிருந்து சுடுநீர் எடுத்து வந்துள்ளான். இடைவேளை என்பதால் சக மாணவர்கள் வகுப்பிற்கு வெளியே சென்றுவிட இயல்பிலே அமைதியான பானுஜா தனது வகுப்பில் தனியாக இருந்துள்ளார். பானுஜா தனித்திருப்பதைக் கண்ட மாணவன் போத்தலில் எடுத்து வந்த சுடுநீரை பானுஜாவின் காலில் ஊற்றியுள்ளான். இதனைக் கண்ட ஆசிரியர் மாணவனிடமிருந்து வாங்கிய சுடுநீரை அவனது காலில் ஊற்றியுள்ளார். அதுமட்டுமலலாது வீட்டிலும் சொல்லக்கூடாதெனவும் இரு மாணவர்களையும் மிரட்டியுள்ளார்.

இதனால் விசனமடைந்த இரு பிள்ளைகளதும் பெற்றோர் பாடசாலை அதிபரிடம் முறையிட்டதுடன் அவ்விடயத்தைப் பெரிதுபடுத்தாமலும் விட்டுச் சென்றுள்ளனர். ஆனால் சம்பந்தப்பட்ட ஆசிரியர் தனக்கு சார்பான நான்கு சக ஆசிரியர்களுடன் சென்று பானுஜாவை மீண்டும் மிரட்டியுள்ளனர். ஆசிரியர்களின் தொடர் நடவடிக்கையால் பயந்த சிறுமி பானுஜா சம்பவத்தை பெற்றோரிடம் தெரிவித்துள்ளார்.

மீண்டும் பாடசாலையை சென்ற பெற்றோர்க்கும் அதிபர், ஆசிரியர் குழுவுக்குமிடையில் வாக்கு வாதம் ஏற்பட்டது. இறுதியில் பானுஜா மூளை வளர்ச்சிகுன்றியவர் என்றும் அவரை வைத்திய ஆலோசனைக் குட்படுத்தும் படியும் இல்லையேல் அவரை வேறு பாடசாலைக்கு மாற்றுங்கள் எனவும் பாடசாலை நிர்வாகம் மிரட்டியுள்ளது.

இதனால் மனமுடைந்த பெற்றோர், பாடசாலை இறுதித் தவணை என்பதால் வேறு பாடசாலைகளில் அனுமதி பெறுவது கடினமானதென்றும், அடுத்தவருடம் தரம் 5இற்கான புலமைப் பரிசுபெறும் பரீட்சை என்பதனாலும் பானுஜாவின் கல்வி பாதிக்கப்படும் என்றும் கூறுகின்றனர். இந்நிலையில் பானுஜாவும் குறித்த பாடசாலையில் தொடர்ந்து கல்வி கற்க மறுத்துவருகின்றார். பானுஜாவின் மனநிலை அறிந்த பெற்றோர் செய்வதறியாது தவிக்கின்றனர்.

குறித்த பாடசாலையின் அதிபர் ஒரு தலித் பெண் என்பதால் சக ஆசிரியர்களால் பல்வேறு பிரச்சனைகளை எதிர்கொண்டு வருகின்றார். அப்பிரதேச மக்களின் போராட்டத்தினாலும், ஆதரவினாலுமே அத்தலித் பெண் அதிபர் தொடர்ந்தும் அப்பாடசாலையில் கடமையாற்றி வருகின்றார். மேற்படி சம்பவத்தில் பாதிக்கப்பட்ட பானுஜாவும் ஒரு தலித் மாணவியே. இருந்தபோதும் பானுஜாவின் விடயத்தில் அதிபர் அவர்கள் ஒடுக்கும் சாதியைச்சேர்ந்த ஆசிரியர்களின் விருப்பத்திற்கு அமையவே செயற்பட்டும் உள்ளார் என்பது மிகவேதனைக்குரிய சம்பவமாக உள்ளது.

# தண்ணீர்... தண்ணீர்...

தண்ணீர் வளம் நிறைந்த இடமான யாழ்ப்பாணத்திலும் கூட குடிநீருக்குப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. பின்தங்கிய நிலைகளில் உள்ள கிராமப்புறங்களில் தலித் மக்கள் அதிகமாக வாழும் இடங்களிலேயே குடிநீர்ப் பிரச்சனை அதிகம் ஏற்படுகின்றது.

சாவகச்சேரியில் உள்ள உதயசூரியன் கிராமமும் இதற்கு விதிவிலக்கா என்ன? 140ற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழும் இக் குக்கிராமத்தில் காலை 5.30 மணியிலிருந்து 7.30 மணிவரையும், மாலை 4.30 மணியிலிருந்து 6 மணிவரையுமே அவர்களுக்குத் தேவையான குடிநீர் கிடைக்கிறது. அதாவது நாளொன்றுக்கு மூன்றரை மணித்தியாலங்களே நீரைப் பெற முடிகின்றது. இதற்காக மாதாந்தம் 60 ரூபா வரியும் செலுத்தி வருகின்றார்கள்.

இங்குள்ளவர்களில் அநேகமானோர் நகரச் சுத்திகரிப்பாளர்களாக வேலை செய்த போதும் அவர்களின் சுகவாழ்விற்குத் தேவையான குடிநீர் மட்டும் ஒழுங்காக் கிடைப்பதில்லை. கிராமத்திற்கென ஒரு குடிநீர்த் தாங்கி அமைக்கப்பட்டு தேவைப்படும் போது நீரைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வசதி கட்டாயம் ஏற்படுத்தப்பட வேண்டியது அவசியமானதாகும்.

இப்பகுதியில் வாழ்பவர்கள் வெளியுலக வாழ்க்கைக்கு இன்னும் தங்களைத் தயாப்படுத்தாமலேயே உள்ளனர். இலவசமாகக் கிடைக்கும் கல்வியைக் கூட பூர்த்தி செய்ய முடியாது தமது எதிர்காலத்தை கேள்விக்கிடமாக்கிய துரதிஸ்டசாலிகளாகவே அனேக சிறார்கள் உள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

# சித்தன் கதைக்கிறேன்...

ஒரு சமூகம் முன்னேறவேண்டுமென்றால் அந்தச் சமூகத்துக்கு முதல்ல கண்களாக இருக்கிறது கல்விதான். கால காலமாக ஆதிக்கசாதியினரால மறுக்கப்பட்ட கல்வி கடந்த அம்பது வருசத்தில இருந்துதான் குறிப்பிட்ட சில சமூகங்களுக்கு கல்வி கிடைச்சுது! ஆனால் இது வரையிலும் மிகப்பெரிய கல்விமான்களா, ஒரு சமூக ஆய்வாளரா அல்லது பேராசிரியரா இன்னும் வரயில்லையெண்டால் கல்விய நாங்க சரியா பயன்படுத்த இல்லை எண்டதுதான் காரணம். நடந்து முடிஞ்ச இருபத்தஞ்சு வருச யுத்தமும் இச்சமூகத்தின்ர கல்விய விழுங்கீட்டுது. அதால எல்லாரும் கல்விக்கு முக்கியம் குடுக்கிறது மிக மிக அவசியம்.



குறிப்பா இலங்கையில இருக்கிற சமூகங்களுக்கான ஒற்றுமைய எங்கட கல்விக் கூடங்களே பிரிச்சு வைக்குது. நேசறிக்கு சேருற வயதில இருந்து பட்டம் பெறும் வரைக்கும் குழந்தையள், இளைஞர்கள் எண்டு சொல்லி சகல தரப்பினரும் இப்பிரிவுக்குள்ளேயே வளருகினம். அதிகமான நேசறிவளிய ஒரே சாதியச் சேர்ந்த பிள்ளையள், ஒரே மதத்தைச் சேர்ந்த பிள்ளையள் எண்டு சொல்லி குழந்தையிலயே குழந்தைகள் கூறுபோடப்படுகினம். பிறகு பள்ளிக்கூடமெண்டாலும் ஒவ்வொரு சமயத்துக்கும் ஒவ்வொரு பள்ளிக்கூடம் இலங்கையில் இருக்கிற எல்லாருக்கும் ஒரே மாதிரியான கல்வித்திட்டம் எண்டால் எதுக்கு மத ரீதியாக பள்ளிக்கூடம் நடத்தவேணும். சில சாதிகளுக்க மட்டும் சில பள்ளிக்கூடங்களாக இண்டைக்கும் இருக்கு. எல்லா மதத்தைச் சேர்ந்த பிள்ளையளும் ஒரு பள்ளிககூடத்தில படிக்கயுக்குள்ளதான் ஒருத்தர ஒருத்தர் புரிஞ்சு கொள்ள வாய்ப்பா இருக்கும். ஒருத்தரை ஒருத்தர் புரிஞ்சுகொண்டால்தான் ஒரு உண்மையான ஒற்றுமையான சமூகத்தை கட்டியெழுப்பலாம். ஏழைகளுக்கு எண்டொரு பள்ளிக்கூடம், பணக்காரனுக்கு எண்டொரு பள்ளிக்கூடமாகவும், இந்த வேற்றுமைகளோட இன, மத, வர்க்க, சாதி எண்டு பலவாறா சமூகம் பிரிஞ்சு கிடக்கு!

சோதினை பாசாகிறதுக்கு மட்டும் பாடங்களைப் படிக்காமல், பெறுபேறுகளுக்கு மட்டும் படிக்காமல் இந்தக் கல்விகளால் சமூக மேன்மைக்கும், ஒருமைப்பாட்டுக்கும் எந்தளவு பயன் இருக்கு எண்டதையும் மாணவர்கள் கேள்விக்குட்படுத்த வேணும். கேள்வி கேட்காத சமூகம் புலன் இழந்த மனிதர்களுக்குச் சமன். கேள்விகள்தான் பகுத்தறிவை வளக்கும், அறிவுதான் ஒரு சரியான சமூகத்தை கட்டியெழுப்பும். சமூக மாற்றத்தை உருவாக்கும். சமூக மாற்றத்தை ஏற்படுத்த கல்வி முக்கியமாக பங்கு செலுத்தவேணும். இதில கல்வி அமைச்சில் இருந்து அது சார்ந்த அதிகாரிகள் வரை கவனம் செலுத்தவேணும். தங்கள் தங்கள் மதம் சார்ந்தும், காலச்சாரம் சார்ந்தும் சிந்திக்கிறதாலதான் ஒரு சமூகமமாற்றத்துக்காக ஒரு விதையப்போடமுடியாமல் கிடக்கு. மக்களின்ர வளர்ச்சி, மேன்மை, ஐக்கியம் உண்மையிலேயே வரவேணும் எண்டால் கல்வி முறையில பல மாற்றங்களை ஏற்படுத்தவேணும்.

இலங்கையில ஏற்பட்ட யுத்தத்தால வடக்கிலும், கிழக்குலும் 95 ஆயிரம் தமிழ் விதவைப் பெண்கள் இருக்கினம் எண்டு சொன்னால் அவர்களுடைய மறுவாழ்வுக்கான திட்டம் எது எண்டு கேட்டால் யாரிட்டையும் சரியான பதில் இருக்காது. நம்மட கல்வியும், கலாச்சாரமும் சார்ந்த சமூகக் கட்டமைப்பு மாற்றப்படாத வரைக்கும் இவ்விதவைகளின் மறுவாழ்வு என்பது தேர்தல் பிரச்சாரத்துக்கு மட்டும்தான் பயன்படும். அனுதாபப் பட்டுக்கொண்டிருந்தால் மட்டும் பிரச்சனை தீராது. மாற்றுவழிய நாம கண்டுபிடிக்க வேணும். அதற்கு சுயசிந்தனை கல்விமுறைகள் அவசியம். இவைகளை கல்விமான்கள் எனத் தங்களை சொல்லிக் கொள்கின்றவர்கள் சிந்திக்க வேணும். ❍

# “வலி. கிழக்கு பிரதேசத்திலமைந்துள்ள மயானங்களின் ஒருங்கிணைந்த, மீள்கட்டுமானம்”

-இளமோகன்-

**வ**லி. கிழக்கு பிரதேசத்தில் சுமார் இருபத்தைந்து மயானங்கள் அமைந்துள்ளன. இவற்றில் குறிப்பிட்ட சில கிராமங்களில் நான்கு ஐந்து மயானங்கள் உள்ளன. ஒரு கிராம சேவகர் பிரிவில் இரண்டு மூன்று மயானங்கள் அமைந்துள்ளன.

பொருளாதாரம், அபிவிருத்தி, சுகாதாரம், ஆரோக்கியமான சமுதாயம் என்பவை பற்றிப் பேசுகின்ற, மனிதநேயமுள்ள ஒவ்வொருவரும் இதுகுறித்து ஆழமாக சிந்திக்க வேண்டிய தேவையுள்ளது. அத்துடன் இம் மயானங்கள் கொண்டுள்ள காணி விஸ்த்தீரணங்களை மையமாக வைத்து இவற்றின் மீள்கட்டுமானம் தொடர்பாக, ஓர் தூர நேக்கில் அமைந்த திட்டங்களை முன்வைக்க வேண்டும்.

முதலில் கிராமங்கள் தோறும் இரண்டு மூன்று மயானங்களென அமைந்துள்ளமையினால் ஏற்படும் **பாதகமான அம்சங்களை** ஆராய்ந்தால்:

மக்கள் குடியிருப்புக்களுக்கு மத்தியில் இவை அமைந்திருப்பதால், மக்களது சுகாதாரத்திற்கும், சுகவாழ்வுக்கும் பங்கம் ஏற்படுகிறது. வளி (காற்று) மற்றும் சுற்றுப்புறச் சூழல் மாசடைகிறது. ஒவ்வொரு மயானங்களின் பராமரிப்பு மற்றும் அபிவிருத்திக்கென வருடாந்தம் பல மில்லியன் ரூபா வீண் விரயமாக்கப் படுகின்றது. மயானம் அமைந்துள்ளதென்ற போர்வையில், மிகவும் பெறுமதி மிக்க பல ஏக்கர் காணிகள் பயன் படுத்த முடியாத நிலையிலுள்ளன.

பொருளாதார அபிவிருத்தி பற்றிய நோக்கில், **சாதகமான அம்சங்கள்:** இப் பிரதேசத்திலுள்ள ஒவ்வொரு மயானங்களும் அமைந்துள்ள காணி விஸ்த்தீரணம், பத்து, பதினைந்து பரப்புக்கு அதிகமானவையாக உள்ளன. இந்த அடிப்படையில் அனைத்து மயானங்களிலும் சுமார் 300 பரப்பு காணிகளுக்கு அதிகமாக உள்ளன. ஆகக் கூடியது அரைப்பரப்பு, ஒருபரப்புக் காணிக்குள் செய்யக் கூடிய தகனக் கிரியைக்காக, பெருமளவிலான காணிகள் பயன்பாடின்றியுள்ளன.

வலி. கிழக்கிலுள்ள அனைத்து மயானங்களும் செம்மண் வளமுள்ள காணிகளாகள் மிகப் பெறுமதி வாய்ந்தவையாகும். 300 பரப்பிற்குமதிகமாகவுள்ள காணிகளின் பெறுமானத்தைக் கணக்கிலிட்டால் பல மில்லியன் ரூபாய்கள் தேறும். எனவே இந்தப் பிரதேசத்திலமைந்துள்ள அனைத்து மயானங்களையும் ஒருங்கிணைத்து, சிறந்த முகாமைத்துவத்தின் கீழ் கொண்டு வந்தால், மிகச் சிறந்த **அனுகூலங்களைப்** பெற்றுக் கொள்ள முடியும்.

தகனக் கிரியைகளை மேற்கொள்ள மிகப் பொருத்தமான இடங்களாக கோப்பாய் கடல் நீரேரிக் கரையும், ஆவரங்கால் கிழக்கிலமைந்த கடல் நீரேரிக் கரையையும் தெரிவு செய்யலாம். இவ் இரண்டு இடங்களிலும் ஒரே நேரத்தில், பல உடல்களைத் தகனம் செய்யக் கூடியவாறு நவீன முறையில் அபிவிருத்தி செய்ய வேண்டும். சகல வசதிகளுடனமைந்த மக்கள் தங்குமிடங்கள் அமைக்க வேண்டும். ஏனைய இடங்களிலுல்ள மயானங்களை மூட வேண்டும். மயான அபிவிருத்திச் சபைகள் அனைத்தையும் உடன் கலைத்து விட வேண்டும். இவற்றின் பொறுப்புக்கள், செயற்பாடுகளை பிரதேச சபைகளிடம் கையளிக்க வேண்டும். பிரதேச சபைக்கு, இறந்தவர்களின் உடல்களை எடுத்துச் செல்லும் ஊர்திகளை வழங்க வேண்டும். அத்துடன் இறந்தவர்களின் இறுதி ஊர்வலத்தில் பங்கு கொள்பவர்கள் பயணிப்பதற்கான பேரூந்துகளோ அல்லது சிற்றூர்திகளோ பிரதேச சபைகளின் பொறுப்பில் சேவையிலிருக்க வேண்டும். மேற்படி ஊர்திகளின் சேவையைப் பெறவிரும்புவோர் பிரதேச சபையுடன் தொடர்பு கொண்டு சேவைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

இத்திட்டத்தை நடைமுறைப் படுத்தும் போது மயான பபராமரிப்பாளர்கள், வாகன ஓட்டுனர்களென சிலருக்கு வேலைவாய்ப்புக்கள் வழங்கலாம். பிரதேச சபைக்கு வருவாய் கிடைக்கும். சுற்றுப்புறச் சூழல் சுத்தமாக இருக்கும். பொதுமக்களின் சுகவாழ்வுக்கும் உத்தரவாதக இருக்கும். அனைத்து மயானங்களினதும் அபிவிருத்திக்கென ஒதுக்கப்படும் பெருமளவான நிதி வீண் வரயம் ஆகாமல் தடுக்கப்படும். பல நூற்றுக் கணக்கான பரப்பளவு காணிகள், பிரதேசத்தின் அபிவிருத்தி மற்றும் மக்கள் பாவனைக்கு பயன்படும்.

மூடப்படும் மயானங்கள் அமைந்துள்ள காணிகளை அரசு நேரடியாகப் பொறுப்பேற்க வேண்டும். இக்காணிகளின் பயன்பாடு தொடர்பில் அந்தந்தக் கிராம மக்களின் கருத்துக்களுக்கு அரசு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். இவற்றின் பயன்கள் தொழில் நிலையங்கள், மற்றும் பயிற்சி நிலையங்கள், கல்வி, கலை தொடர்பான பொது மண்டபங்கள், விளையாட்டு மைதானங்கள்,

# பூ மலரும் தருணம்

'இப்படியாகவே போயிற்று,

எங்கள் காலம்.

இதைச் சொல்லிவிட்டுக்

களைப்பாய் எழுந்தார் கதைசொல்லி.

இறந்ததையும்

வருவதையும் புனைவதே

பிழைப்பாய்க் கொண்டோர்

இந்தக்

கசகரணம் கெட்டவர்கள்.

த(ன்)னைத் தொலைத்து

அதுவாகிக், கரைதலைக்

கானவிடாக் கரும்புள்ளிகள், –இந்தக்

கருத்துக் கந்தசாமிகள்.

அடுத்தவர் உணர்வையும்

ஓய்ந்த பொழுதுகளையும்

உண்டு செமிப்போர்.

உனக்குப் பட்டது

உன்னோடு ஒருபோதும்,

நான், நீயாக முடியா.

பட்டறியின்

படுதல், சுய இழப்பின்றி வேறில்ல.

இன்பம்,மட்டுமல்ல,

அழுகையையும் தான்.

எதையுமே, நினைவில் இருத்தி
யாரும் இங்கு,
கொள்ளவில்லை–நீ,

அடிக்கிற மாதிரி, அடி!– நான்

அழுவுற மாதிரி,,,,–இது

நடிப்பல்ல, வாழ்வு.

வாழ்தல், குழந்தை போல

வேஷம் தரியா. – எந்தக்

குழந்தையும், வாயால் சிரித்து

கண்டவர் யாருமில்லை.

களிப்புக் குழந்தைக்கு

கற்றலே தலைச் சுமை.

வாழ்தலுக்குக் கற்றல்,

விளக்கொளியில்

சூரியன் பார்த்தல் போல.

ஒளி இருந்தாலும்

இல்லாதுபோயினும்

தரிசனைக்கு

தலையின்றிய

அவரவர், மனம் வேண்டும்.

புத்தியால்,

பரவசப் பாக்கியமில்லை.

புத்தர்,

தமிழரல்ல:–,ஏன்

சிங்களமுமல்ல. – அவர்

ஒருகுழந்தை.

–எஸ். நஸீறுதீன்.–

## பூ மலரும் தருணம்

*அனைத்தும் அறிந்தபின்,*

*பற்றுகள் அறுத்து – மீளப்*

*பிறந்த பிள்ளை.*

*அனைத்து மானிடரின்*

*அகல் விளக்கு.*

*பொதுச் சொத்தைக்*

*களங்கம் பண்ணாதீர்.*

*குழந்தை நடக்கிறது,,,,*

*முன்னிற்கும் கோலை–உன்*

*எழுதுகோலை*

*அப்பால் நகர்த்து.*

❍

-----------------------------

**13 ஆம் பக்கத் தொடர்ச்சி.....**

மக்கள் குடியிருப்புக்கள் என்பவை சார்ந்தனவாக இருக்கும்.

மேற்கூறிய திட்டம் நடைமுறைப் படுத்துவதில் ஏதேனும் இடையூறுகள் இருப்பின், "மின்சாரம் மூலம் உடல்களைத் தகனம் செய்யக் கூடிய நவீன முறையிலான ஓர் மயானத்தை அமைக்கலாம்."

எனவே பிரதேசத்தின், மயானங்களது அபிவிருத்தி போன்றவற்றிற்கு நிதி ஒதுக்கீடு செய்யும் போது, அப் பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களின் சுகவாழ்வு மற்றும் பல மில்லியன் கணக்கான பணத்தின் வீண் விரயம் என்பவற்றை ஆராய்ந்து, ஓர் ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்கக் கூடிய அபிவிருத்திகளுக்கு முக்கியத்துவம் அளிக்கலாம்.

நன்றி

❍

## காணி இருந்தும் வீடு கட்ட முடியாத நிலை

கடந்த 50 வருடங்களுக்கும் மேலாக திருமதி முருகையா குடும்பம் பரம்பரை பரம்பரையாக இணுவில் தியேட்டர் வீதியிலுள்ள அரச காணியில் குடியிருந்து வருகிறார்கள். இவர்கள் இக் காணியில் குடியிருப்பதற்காக இவர்களின் பெற்றோர்களுக்கு காணிப்படிவம் எழுதி வழங்கப்பட்டுள்ளது.

இருப்பினும் தொடர்ந்து வந்த இடப்பெயர்வுகள் காரணமாக இவர்களிடம் இருந்த காணிப்படிவம் தொலைந்து விட்டது. சொந்தமான காணி இருந்தும் படிவம் தொலைந்த காரணத்தால் அரசினால் வழங்கப்படும் அடிப்படைத் தேவைகளான வீடு, மலசலகூடம் என்பன அமைப்பதற்குத் தேவையான உதவிகளைப் பெற முடியாதுள்ளது.

இது தொடர்பாக விதவைத் தாயான திருமதி முருகேசுவிடம் கேட்கப்பட்டபோது: "கல்வி அறிவும் குறிப்பிட்ட விடயம் தொடர்பான விளக்கமும் இல்லாத என்னால் இவற்றுக்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வது மிகவும் கடினமாகவே உள்ளது. கணவனை இழந்த நான் ஒரு நோயாளியாகவும் இருக்கிறேன் இருந்தும் நானும் திருமண வயதிலுள்ள எனது பெண் பிள்ளையும் கூலி வேலைக்குச் சென்றே வாழ்கையை நடத்துகின்றோம். இந்நிலையில் எம்மால் காணி வாங்குவதோ வீடு கட்டுவதோ சாத்தியமாகுமா? காணிப்படிவம் தொலைந்த காரணத்தால் எமக்கு வீடு கட்டுவதற்காக அரசாங்கத்தால் சிபார்சு செய்யப்பட்டிருந்த அனுமதி கூட தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. இது எனக்கு பெரும் ஏமாற்றமாகவே உள்ளது. காணிப்படிவம் இல்லாது உதவிகள் மறுக்கப்பட்டதால் எனது சகோதரி இந்து மயானத்துக்கு அருகில் உள்ள காணியில் வசித்து வருகிறார். சுடலைக்கருகில் என்றாலும் அவரது கணவனின் காணி இருக்கிறது. ஆனால் எனது நிலை அப்படியில்லை. இந்தப் பிரச்சனைக்கு யாராவது உரிய முறையில் நடவடிக்கை எடுப்பார்களா?" என திருமதி முருகேசு அவர்கள் உதவிதேடி அலைகின்றார்.

❍

வடு ~16 இன் தொடர்ச்சி ....

# தற்போது கனடாவில் வசித்துவரும்

# என்.கே.ரகுநாதன்

## அவர்களுடன் உரையாடிய கற்சுறாவின் அனுபவங்கள்.

**கற்சுறா :** கந்தன் கருணை நாடகம் எழுதப்பட்ட காலத்தின் அனுபவங்களைச் சொல்லுங்கள்.

**இரகுநாதன்:**

கந்தன் கருணை நாடகம் எழுதப்பட்டது 1969ம் ஆண்டு. உண்மையில் அந்தக்காலப் பகுதியில்தான் மாவிட்டபுர ஆலயப்பிரவேசப் போராட்டம் நடைபெற்றது. எஸ்.ஜே. நாகரட்ணம், தங்கவடிவேல் மாஸ்ரர், டானியல், நான் எல்லோரும் சேர்ந்து நடாத்தியதுதான் அந்தப் போராட்டம். அவன்தான் சுந்தரலிங்கம் பொலிசையும் கூப்பிட்டுவைத்துக் கொண்டு கோயிலுக்குள் எங்களை போகவிடாமல் வாசலை மறித்துக்கொண்டு நின்றார். நாங்கள் கொஞ்சம் தள்ளியிருந்து ஆர்ப்பாட்டமில்லாமல் பஜனை செய்துகொண்டிருந்தோம்.

நாங்கள் கோயில் பிரவேசப்போராட்டம் செய்ததினால் அவர்களுக்கு அந்த வருடம் தோர்திருவிழாவோ சர்ப்பரத் திருவிழவோ செய்யமுடியவில்லை. கோயில் குருமாரும் ஐந்தாறு பொலிசுக்காரரும் சும்மா கோயிலைச் சுற்றிவந்து கொண்டிருந்தார்கள். பல எதிர்ப்புகளுக்கு மத்தியில்தான் மாவிட்டபுர கந்தசுவாமி கோயில் போராட்டம் நிகழ்ந்தது. அது ஒரு பெரிய வரலாறு.

மாவிட்டபுர கந்தசுவாமி கோயில் போராட்ட அனுபவமும், அதன் பின்புலமுமே 'கந்தன் கருணை' நாடகம் உருவாகக் காரணமானது. 'கந்தன் கருணை' நாடகம் கிட்டத்தட்ட இலங்கையில் 40 மேடைகளுக்கு மேல் பல்வேறு இடங்களில் மேடையேறியிருக்கிறது. கொழும்பு சரஸ்வதி மண்டபம் மற்றும் தமிழ்நாட்டில் கூட அது மேடையேறியிருக்கிறது. இந்தக் 'கந்தன் கருணைப்' போராட்டத்தில் மிக முக்கிய பங்காற்றியவர் டானியல். ஆனால் எம்மால் அவரை அந்தப் போராட்டத்தில் முன்னுக்கு விடமுடியாமல் போய்விட்டது. ஏனென்றால் அவர் ஒரு கத்தோலிக்கராக இருந்தார். என்னடா கத்தோலிக்கன் வந்து சைவக்கோவில் விவகாரத்துக்க வாறான் என்று பிரச்சனை மாறிவிடும் , அதை வைத்தே பிரச்சனையைத் திசை திருப்பப் பார்ப்பார்கள் என்பதால் டானியலை எங்களால் முன்நிறுத்த முடியவில்லை.

**கற்சுறா :** 'கந்தன் கருணை' நாடகம் போடும் போது நெருக்கடிகள் இருந்தனவா?

**இரகுநாதன்:**

பிரச்சனைகள், நெருக்கடிகள் என்று பெரிதாக இல்லாது அதற்கு ஆதரவு பெரிதாக இருந்ததென்பது உண்மை. முதலாவது மேடை வீரசிங்கம் மண்டபத்தில் ஏறியது. பின் பல்வேறு தாழ்த்தப்பட்ட மக்கள் வாழும் பகுதிகளில் மேடையேற்றப்பட்டது. தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தோடு இணைந்து பணிபுரிந்த உயர்சாதி ஆதரவாளர்களும் தமது கிராமங்களிலும் 'கந்தன்கருணை' நாடகத்தை கொண்டுபோய் மேடை ஏற்றினார்கள். சில இடங்களில் உயர்சாதி இந்துக்கள் எதிர்ப்புத் தெரிவித்தாலும், தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் முன்னால் பெரிதளவாக ஒன்றும் செய்துவிட இயலவில்லை. இப்ப பாருங்கோ தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் மட்டும் பங்கு பற்றவில்லைத்தானே யாழ்ப்பாணத்து நல்லூர் ராமசாமி ஐயர் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டவர் என்ற ஒரு விசயமும் இருக்குத்தானே.

சங்கானை தேனீரக்கடைப் பிரவேசப் போராட்டத்தில் நான் பங்கு பற்றினேன். தேனீர் கடைப்பிரவேசம் மற்றும் ஊர்வலங்களில் நான் டானியல் போன்றவர்கள் நேரடியாகப் பங்குபற்றினோம் அதில் உயர்சாதியினர் எங்களைநோக்கி துப்பாக்கிப் பிரையோகம் செய்தார்கள். எங்களிடமும் பாதுகாப்புக்குத் துப்பாக்கிகள் இருந்தன. நாங்கள் திருப்பிச் சுட்டதில் அவர்களில் ஒருவர் இறந்தார்.

-தொடரும்-

உங்களுடைய மதம்தான் எங்களுடைய மதம் எனில் உங்களுடைய உரிமைகளும் எங்களுடைய உரிமைகளும் சமமாக இருக்க வேண்டும். ஆனால் உன்மை நெிலை அப்படியா இருக்கிறது.? இல்லையே! அவ்வாறு இருக்கும்போது நீங்கள் எட்டி உதைப்பதையும் அவமதிப்பதையும் பொறுத்துக்கொண்டு, எந்த அடிப்படையில் எங்களை இந்து மதத்தில் இருக்கச் சொல்கிறீகள்? ஒரே மதத்தை பின்பற்றும் இரண்டு பேர்களிடையே வேறுபாடு காட்டும் மதம் ஒருதலைச் சார்பானதல்லவா? தன்னைப்பின்பற்றுகின்ற கோடிக்கணக்கானவர்களை கிரிமினல் குற்றம் செய்தவர்கள் போலவும் நாயிலும் இழிந்தவர்களாகவும் நடத்தி, தாங்க முடியாத இயலாமைகளை அவர்கள் மீது திணித்து துன்புறுத்துகின்ற மதம் எவ்வகையிலும் ஒரு மதம் அன்று. கொடிய அமைப்பை போற்றுகின்ற எதுவும் மதம் என எப்படி பெயர்பெற முடியும்? மதமும் அடிமை முறையும் ஒன்றோடு ஒன்று பொருந்தியிருக்க முடியாதவை.



-அம்பேத்கர்-

14-04-1891 - பிறப்பு 06-12-1956 - இறப்பு